செய்திக் குறிப்பு   dt: 11.01.2018

ஹாம் ரேடியோ என்று அழைக்கப்படும் அமெச்சூர் ரேடியோ, வயர்லெஸ் கருவிகளை அமைத்து அவற்றை இயக்கும் ஒரு பயனுள்ள அறிவியல் செயல்பாடு ஆகும். காரைக்கால் மாவட்ட பேரிடர் மேலாண்மை நிர்வாகம் முதன்முறையாக அரசு அதிகாரிகளுக்கும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் 01-12-2017 அன்று ஹாம் ரேடியோ உபயோகப்படுத்துவதற்கு ஒரு விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. ஹாம் ரேடியோ இயக்குவதற்கு விருப்பமுள்ள தகுதியான நபர்களிடம் இருந்து விண்ணப்பம் பெறப்பட்டு சுமார் 100 நபர்களுக்கு 10.01.2018 அன்று காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் வளாகத்தில் ஹாம் ரேடியோவை கையாள்வது மற்றும் அதன் - பயன்பாடுகள் ஒரு நாள் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. இது சம்பந்தமாக வரும் காலத்தில் மேலும் பயிற்சி நடத்துவதுடன் திறன் சோதனை மற்றும் செய்முறை தேர்வு நடத்தி தகுதியுள்ள நபர்களை தேர்ந்து எடுத்து காரைக்கால் - மாவட்ட பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் பொதுமக்களுக்கு சேவை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உதவி மாவட்ட ஆட்சியர் திரு. மங்கலாட் தினேஷ் அவர்கள் கூறினார்கள். இந்த விளக்க பயிற்சியை Ametour wireless Station operation Society தலைவர் திரு. S.P. இராஜேந்திரன் பயிற்சி அளித்தார்கள்.

11/1/18

Asst. P.R.O. to
COLLECTOR